





கடலூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் நடைபெற்ற பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சென்னை திரும்பிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (16.7.2025) எழும்பூர் இரயில் நிலையத்தில் பெருந்திரளான பொதுமக்கள் உற்சாகமாக வரவேற்றனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.7.2025) மயிலாடுதுறை மாவட்டம், வழுவூர் முகப்பு சாலையில் கழகத்தின் சார்பில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வெண்கல திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். இந்நிகழ்வில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், மாவட்ட கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், குத்தாலம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் மங்கை எம்.சங்கர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் பி.கல்யாணம், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வி.எஸ். பிரபாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.7.2025) மயிலாடுதுறையில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார்.

### ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற அடிப்படையில்

# மக்களோடு கூட்டணி அமைத்து வருகிறார் முதல்வர்!

## நெல்லையில் – கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!

நெல்லை, ஜூலை 18-

‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற அடிப்படையில் மக்களோடு கூட்டணி அமைத்து வருகிறார் முதல்வர் என்றும் சில நடிகர்கள் சினிமாவில் நடிக்கும் போது லாக்அப் மரணங்களுக்கு ஆதரவாக செயல்பட்டு விட்டு அரசியல் கட்சி தொடங்கியவுடன் மக்கள் மேல் அக்கறை இருப்பதைப் போல் காட்டிக் கொள்கிறார்கள் எனவும்

நெல்லையில் கழக துணைப் பொதுச் செயலாளர், கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் செய்தியாளர்களிடம் பேட்டியின் போது தெரிவித்தார்.



கழக துணைப் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற கழக குழு தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது:-

அனைத்து தேர்தல்களிலும் வாக்காளர் பட்டியலில் குழப்பம் செய்து வாக்காளர்கள் சிலரை நீக்கம் செய்து, ஒரே இடத்தில் ஐந்தாயிரம் வாக்காளர்களை இணைத்து நியாயத்திற்கு புறம்பாக பா.ஜ.க. மற்றும் கூட்டணியினர் பல இடங்களில் வெற்றி பெற்றுள்ளனர். இந்த ஆண்டு தேர்தல் நடைபெற உள்ள பீகாரிலும் மீண்டும் குழப்பத்தை ஏற்படுத்த பா.ஜ.க முயல்கிறது.

ஒரு திரைப்படம் மக்களுக்கு பல செய்திகளை சொல்லக்கூடிய ஒன்றாக இருக்கிறது. சில நடிகர்கள் சினிமாவில் நடிக்கும் போது லாக்அப் மரணங்களுக்கு ஆதரவாக செயல்பட்டு விட்டு அரசியல் கட்சி தொடங்கியவுடன் மக்கள் மேல் அக்கறை இருப்பதைப் போல் காட்டிக் கொள்கிறார்கள்.இது நகைச்சுவையாக பார்க்கப்படுகிறது. தற்போது லாக் அப் மரணங்களுக்கு எதிராக பேசி வருகின்றனர்.

மேலும் எங்களின் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி மிகவும் பலமாக இருக்கிறது. அதே நேரத்தில் ஓரணியில் தமிழ்நாடு என்ற அடிப்படையில் மக்களோடு முதலமைச்சர் அவர்கள் கூட்டணி அமைக்கிறார். அதுவும் மிகச் சிறப்பாக சென்று கொண்டிருக்கிறது.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. தெரிவித்தார்.



திருவாரூரில் முதல்வர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்ற நிகழ்வுகளை சிறப்பாக்கிய மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் மற்றும் சார்பு அணிகளின் அமைப்பாளர்களுக்கு மாவட்டக் கழகம் சார்பில் நினைவுப் பரிசுகளை மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. வழங்கினார். அப்போது கொரடாச்சேரி ஒன்றியச் செயலாளர் சேகர் கலியபெருமாள் நினைவு பரிசைப் பெற்றார்.

### ஒரே வாரத்தில் 3 மூட்டு மாற்று அறுவை சிகிச்சை செய்து திருமயம் அரசு மருத்துவமனை மருத்துவர்கள் சாதனை!

# மூட்டு மாற்று அறுவை சிகிச்சை செய்த 3 பேருக்கு நிதி உதவி!

## அரசு மருத்துவர்களைப் பாராட்டி அமைச்சர் எஸ்,ரகுபதி நேரில் வழங்கினார்!

புதுக்கோட்டை, ஜூலை 18 -

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அரசு மருத்துவமனையில் கடந்த வாரம் கடுமையான மூட்டு வலி காரணமாக அனுமதிக்கப்பட்டிருந்த திருமயத்தைச் சேர்ந்த சின்னையா, ஒ.சிறுவயலை சேர்ந்த சோலையம்மாள், பாப்பான்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பொன்னழகு ஆகிய மூன்று நபர்களுக்கும் பல்வேறு கட்ட பரிசோதனைகள் செய்த பின்னர் ஒரே வாரத்தில் மூன்று நபர்களுக்கும் முழங்கால் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

திருமயம் அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் எலும்பு மூட்டு அறுவை சிகிச்சை நிபுணர் நெடுங்களி மூன்று நபர்களுக்கும் மூட்டு மாற்று அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக செய்துள்ளார்.

இதுகுறித்துக் கூறிய மருத்துவர் நெடுங்கிள்ளி கடுமையான மூட்டு வலியால் வந்த மூன்று நபர்களுக்கும் உடனடியாக பல்வேறு கட்ட பரிசோதனைகள் செய்யப்பட்டு மூட்டு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளதாகவும் அறுவை சிகிச்சை செய்த மூன்று நாட்களிலேயே அவர்கள் எழுந்து நடந்து தற்போது நலமுடன் இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் இந்த சிகிச்சையை தனியார் மருத்துவமனையில் செய்தால் ஒரு நபருக்கு இரண்டு லட்சம் ரூபாய்க்கு மேல் செலவாகும் என்றும் அதை தமிழ்நாடு முதலமைச்சர் மருத்துவ காப்பீடு திட்டத்தில் இலவசமாக செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் இது போன்று வரும் பல்வேறு நபர்களுக்கும் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இது குறித்து திருமயம் அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர் (மயக்கவியல்) கிருஷ்ணமூர்த்தி கூறுகையில்:

திருமயம் அரசு மருத்துவமனையில் குடல் வாழ்வு, சிசேரியன், உள்ளிட்ட அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டு வருகிறது. பெரும்பாலும் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை தனியார் மருத்துவமனைகளில் தான் பெரும்பாலும் செய்யப்படும் இதுபோன்று இன்னும் எத்தனை நபர்கள் வந்தாலும் அவர்களுக்கும் அறுவை சிகிச்சை செய்து குணமாக்க தயாராக உள்ளோம் என்றும் தெரிவித்தார்.




பெரம்பலூர் மாவட்டத்தில் பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில், 3 புதிய வழித்தடங்களில் புதிய பேருந்து சேவைகளை போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து தொடங்கி வைத்து, பேருந்தில் பயணம் செய்தார். இதில் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கும்பகோணம் துணை மேலாளர் (தொழில்நுட்பம்) புகழேந்தி ராஜ், ராம்குமார், தி.மதியழகன், சி.ராஜேந்திரன், அழகு. நீலமேகம், பட்டுச்செல்வி ராஜேந்திரன், ஏ.எஸ்.ஜாகிர் உசேன், எ.ரசூல் அகமது மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.